பக்கங்கள் 16+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 26 திங்கட்கிழமை 08.04.2024 அதிர்வு 252

இரட்டைக் கொலைச் சந்தேகநபரான

## விமானப் படைச் சிப்பாய் துப்பாக்கிச்சூட்டில் சாவு!

பாதுக்கை – அங்கமுவ பகுதியில் பொலிஸாருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது 04▶



# சு.கவின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் நியமனம்

### கொழும்பில் சந்திரிகா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அதிரடி முடிவு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தற்போதைய உள்ளக நெருக்கடி நிலைமைகளைக் கருத்தில்கொண்டு, கட்சியின் எதிர்கால நடவடிக்கை குறித்து கலந்துரையாடுவதற்காகக் கட்சியின் அரசியல் பீடம் இன்று கொழும்பில் கூடியது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. 04▶

## சு.கவில் இருந்து துமிந்த உள்ளிட்ட மூவரை நீக்குவதைத் தடுக்கும் தடையுத்தரவு நீடிப்பு

துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரைக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு மேற்கொண்ட தீர்மானத்தைத் தடுக்கும் இடைக்காலத் தடையுத்தரவு ஏப்ரல் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சரதி துஷ்மந்த மித்ரபால உள்ளிட்ட சிலர் இந்த மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# ஜனாதிபதி வேட்பாளர் யார்? நாளை கூடுகின்றது மொட்டு

ஜனாதிபதித் தேர்தல் உட்பட அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் ஆராய்ந்து, தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் விசேட கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவின் பங்கேற்புடன் மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளது.

மே தினக் கூட்டம் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

# இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட இஞ்சி, கஜு கடற்படையிடம் சிக்கின!





**(ந.லோகதயாளன்)**

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டதாக நம்பப்படும் இஞ்சி மற்றும் கஜு என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பொருட்கள் காங்கேசன் துறை அருகே ஓட்டோவில் எடுத்துச் செல்லப்பட்ட சமயமே கடற்படையினரால் இன்று அதிகாலை கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள பொருட்களில் 250 கிலோ இஞ்சி மற்றும் 50 கிலோ கஜு என்பன அடங்கியுள்ளன.

இவற்றைச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் வகையில் பலாலிப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.




# மன்னார் விபத்தில் ஹட்டன் இளைஞர் சாவு!

(மன்னார் நிருபர்)

மன்னார் - தாழ்வுபாடு பிரதான வீதி ரெலிக்கொம் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் மன்னாரில் உணவகத்தில் பணியாற்றி வந்த இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

ஹட்டன் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய சந்திரகுமார் (சந்துரு) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக மன்னார் மாவட்டத்தில் தொழில் நிமித்தம் உணவகங்களில் தொழிலாளியாகப் பணிபுரிந்து வந்த நிலையில் நேற்று மாலை விபத்தில் சிக்கி சாவடைந்துள்ளார்.



விபத்தில் படுகாயமடைந்த மேற்படி இளைஞர், சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் பலியாகியுள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் பஸ் மோதி மாணவன் படுகாயம்




(வவுனியா நிருபர்)

வவுனியா, பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் பாடசாலைக்குச் சென்ற மாணவனை இன்று காலை தனியார் பஸ் மோதியதில் மாணவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பத்தினியார் மகிழங்குளம் நோக்கி வந்த பஸ் அதே திசையில் புதுக்குளம் பாடசாலைக்குச் சைக்கிளில் சென்ற மாணவனை மோதி இடம்பெற்ற விபத்திலேயே மாணவன் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி மாணவன் வவுனியா பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் குறித்து தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாட முடிவு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



(கே.வசந்தன்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நியமிப்பதற்காகத் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கலந்துரையாடவுள்ளது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நேற்று வவுனியா தனியார் விடுதியில் இடம்பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பலப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் பிரகாரம் மாவட்ட மட்டத்தில் குழுக்களை அமைக்கும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். 8 மாவட்டங்களுக்குமான குழுக்கள் இந்த மாத இறுதியில் அமைக்கப்படும். இதன் பின்னர் அனைத்து மாவட்டக் குழுக்களையும் ஒன்றுகூட்டி கூட்டமொன்றை வவுனியாவில் மே மாதம் 25 ஆம் திகதி நடத்தவுள்ளோம். இதனூடாக கிராம மட்டத்தில் எமது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைக் கொண்டு செல்லும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

அடுத்து நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் தொடர்பாக நாம் கொள்கை ரீதியில் முடிவெடுத்துள்ளமை தொடர்பிலும் ஏனையவர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். தற்போது இவ்விடயம் இங்கும் புலம்பெயர் தேசத்திலும் பேசுபொருளாக மாற்றப்பட்டுள்ளது. சில சிவில் அமைப்புக்களும் இதனை முன்னெடுத்து செல்லும் பணியை செய்கின்றனர்.

அந்தவகையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளுடன் பேசவுள்ளோம். அத்துடன் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள சிவில் அமைப்புக்கள் மற்றும் முக்கிய அமைப்புக்களுடனும் கலந்துரையாடவுள்ளோம்.

அதற்காக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் உள்ள அணியொன்று செயற்படும். இவர்கள் தமிழரசுக் கட்சி, விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் பேச விரும்பும் கட்சிகளுடனும் கலந்துரையாடுவார்கள்.

தற்போது இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை மாத்திரம் மட்டுமே உள்ளது. இனப்பிரச்சினை இல்லாதது போன்றதும் அது முடிந்து விட்டது போன்றதுமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாயின் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை தீர்கப்பட்டால்தான் அது சாத்தியம் என்ற விடயம் இருக்கின்றது. அதனைச் சரியாகச் செயற்படுத்துவதற்கு நாம் இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும். எனவே, இந்த மாத இறுதிக்கிடையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் கலந்துரையாடுவோம்." - என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**விமானப்படை...**

விமானப் படையின் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் விமானப் படை விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

விமானப் படையின் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்தவர் தொடர்பான தகவல்களைப் பொலிஸாருக்கும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் வழங்குமாறு அவர் ஆலோனை வழங்கியுள்ளார்.

உயிரிழந்தவர், விமானப் படையின் ரக்பி குழுவில் சேவையாற்றுபவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் ஹொரணையில் நேற்று ~~இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்ப~~வத்தின் சந்தேகநபர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி சந்தேகநபர் விடுமுறையில் இருந்தபோது இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்று விமானப் படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் பாதுக்கை - மீரியகல்ல பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின்போது அங்கமுவ பகுதியில் மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த சந்தேநபரை, வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை செய்துள்ளனர்.

அதனைப் பொருட்படுத்தாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேக நபர், பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளார்.

இதன்பின்னர் பொலிஸாருக்கும் சந்தேநபருக்கும் இடையில் பரஸ்பரத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, படுகாயமடைந்த சந்தேகநபர், பாதுக்கை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

ஹொரணை - மொரகஹஹேன பகுதியில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி 2 பேர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரியே இன்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

**சு.க.வின் பதில்...**

இதன்போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டார்.

முன்னதாக, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்குக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்தது.

சந்திரிகாவின் தலைமையில் நடைபெற்ற இன்றைய சந்திப்புக்கு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சான் விஜயலால் டி சில்வா ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

# மூதூர் பழங்குடியின மக்களின் பிரச்சினைகளை ஆராயக் குழு!

## ஆளுநர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை



(எஸ்.கீதபொன்கலன், நூருல் ஹுதா உமர்)

மூதூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நல்லூரில் வாழும் பழங்குடியின மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த உடனடியாக விசேட குழுவொன்றை நியமிக்குமாறு திருகோணமலை அரச அதிபருக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தரவிட்டுள்ளார்.

நல்லூரைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் அண்மையில் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில், நல்லூரில் தங்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை தொடர்பில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதனையடுத்து நல்லூர் பிரதேசத்தை ஆளுநர் செந்தில் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டு, வெளி ஆக்கிரமிப்பாளர்களால் வாழ்வாதார அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவது குறித்து ஆராய்ந்தார். அத்துடன் பழங்குடியின மக்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்பின் அவர்களின் பிரச்சினைகளை ஆராயவும், பழங்குடியின மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் உடனடியாக குழுவொன்றை நியமிக்குமாறு திருகோணமலை அரச அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.





# காத்தான்குடி மக்களின் காஸா நிதி ஜனாதிபதிபதியிடம் வழங்கப்பட்டது

(எம்.எம்.றம்ஸீன்)

காஸா சிறுவர்களுக்கு காத்தான்குடி மக்களின் நிதி உதவி ஞாயிற்றுக் கிழமை (7) மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கண்டி கட்டுக்கல ஜும்ஆ பள்ளி வாசலில் வைத்துக் கையளிக்கப்பட்டது.



காத்தான்குடி பள்ளி வாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவர் பொறியியலாளர் ஏ.எம்.எம். தௌபீக், செயலாளர் மௌலவி இல்ஹாம் பலாஹி , பிரதி தலைவர்களான சத்தார் , மர்சூக் அகமட் லெவ்வை, முன்னாள் தலைவர் ரஊப் ஹாஜியார், முன்னாள் செயலாளர் சபீல் நழீமி, பிரதி செயலாளர்களான அனீஸ் அஹமட், அல் ஹாபிழ் நாசர் சிரேஷ்ட உறுப்பினர் சமீம் ஆகியோர் ஜனாதிபதியிடம் காசோலையைக் கையளித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## குழப்பத்தில் சுதந்திர கட்சி

இதுவரை ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இது போதாத காலம் - மங்குசனி வேளை - என்று இப்பத்தியில் இரண்டு தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தோம். அவரால் அவரது கட்சிக்கும் அந்த மோச நிலைமைதான்.

முன்னர் நாம் குறிப்பிட்ட மாதிரி கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த தயாசிறி ஜயசேகராவை அப்பதவியிலிருந்து தம்மிஷ்டப்படி அதிரடியாக கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தூக்கியடித்தமையுடன் கட்சிக்கான நெருக்கடிக் காலம் தீவிரமடையத் தொடங்கி விட்டது.

அடுத்து கட்சியின் சிரேஷ்ட தலைவர்களான துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரை கட்சிப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுவின் பெயரில் தீர்மானம் ஒன்றை அறிவித்தார் மைத்திரிபால சிறிசேன.

அதற்கு எதிராக அடுத்த நாளே மூவரும் நீதிமன்றுக்குச் சென்று இடைக்காலத் தடை உத்தரவு வாங்கினர். முதலில் பதினான்கு நாள்களுக்கு வழங்கப்பட்ட அந்தத் தடை உத்தரவு இன்று மேலும் பதினான்கு நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த மூவரின் நீக்கத்தோடு கட்சிக்குள் சத்தமில்லாமல் பூகம்பம் வெடித்து விட்டது. அதன் தொடர் நடவடிக்கைகள் இப்போது அரங்கேறுகின்றன.

கட்சித் தலைவராகவிருந்த மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்டிருந்த கட்சியின் போஷகரும் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க, கட்சித் தலைவராக மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்கு எதிராக நீதிமன்றத்துக்குப் போனார். அவரது விண்ணப்பத்தைப் பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைமைப் பதவியை வகிப்பதற்கு இடைக்காலத் தடையுத்தரவு விதித்தது. முதல் கட்ட உத்தரவின்படி வரும் 18 ஆம் திகதி வரை அந்த உத்தரவு நடைமுறையில் இருக்கும்.

நீதிமன்றத்தில் தமது தரப்பு நியாயங்களை முன்வைத்து மீண்டும் கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்பேன் என மைத்திரிபால சிறிசேன சவால் விடுத்தார். நீதிமன்ற நெருக்கடிகளைத் தாண்டி கட்சியின் தலைமைப் பதவி அதிகாரம் அவரது கைகளுக்கு மீண்டும் வருமா என்பதற்குக் காலம்தான் பதில் கூற வேண்டும். ஆனால் அதற்கு இடையில் பல விடயங்கள் கட்சிக்குள் குழப்பமாக அரங்கேறிவிடும் என்பது போல தோன்றுகின்றது.

கட்சியின் கொழும்பு, மருதானை டார்லி வீதி தலைமையகம் பொலிஸாரால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது. இச்சூழலில், தலைவர் செயற்பட முடியாது என்று நீதிமன்றம் இடைக்காலத் தடையும் விதித்து விட்டது.

கட்சியின் தலைவரும் அதிகாரத்தில் இல்லை, கட்சியின் செயலகமும் முடக்கப்பட்டுள்ளது என்ற நிலையில் கட்சி யார் கட்டுப்பாட்டில், எங்கு, எப்படி இயங்குகின்றது என்ற குழப்பம்.

இந்தக் குழப்பச் சூழலில் கட்சியின் பெயரில் மளமளவென்று காரியங்கள் பல நடக்கின்றன.

கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரியில் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அவசர அரசியல் குழுகூட்டம் என்ற பெயரில் இன்று முற்பகல் ஒரு கூட்டம் இடம்பெற்றிருக்கின்றது. ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா நியமிக்கப்பட்டுள்ளார் என்று அக்கூட்ட முடிவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய அவசர கூட்டத்திற்கு கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவே தலைமை வகித்தார் என்றும் கூறப்பட்டது.

பதினொரு பேரைக் கொண்ட கட்சியின் அரசியல் குழுவில் ஆறு பேர் தங்கள் பக்கம் இருக்கின்றனர் என்று நிமல் சிறிபால டீ சில்வா கூறுகின்றார். அதனால் தங்கள் கூட்டத்தின் முடிவு செல்லுபடியானது என்பது அவரது தரப்பு வாதம்.

ஆயினும் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் கூட்டாத அரசியல் குழுவின் கூட்டம் சட்ட ரீதியானதா, அரசியல் குழுவில் இல்லாத சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஏற்றுக் கொள்ளத்தக்கதா, கட்சியின் போஷகர் என்ற முறையில் அவர் கூட்டத்திற்கு தலைமை தாங்கலாம் என்ற வாதம் சட்ட அடிப்படையிலானதா என்ற கேள்விகள் எல்லாம் உள்ளன.

மொத்தத்தில் சுதந்திரக் கட்சி முழுக் குழப்பத்தில் இப்போது என்பது நிச்சய மானது.

# வடக்கு, கிழக்கு நலன்புரி நிலையங்கள் இந்த வருடம் முழுமையாக மூடப்படும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



போர் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்கள் அனைத்தும் இந்த வருடம் மூடப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சால் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்ட நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று (7) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று நலன்புரி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அங்கு தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 10. இதில் 9 குடும்பங்களுக்கு காணிகள் விடுவிக்கப்பட்டு இவ்வருட இறுதிக்குள் மீள்குடியேற்றப்படவுள்ளன. ஒரு குடும்பம் மாத்திரமே தமது பூர்வீக காணிகளை வழங்குமாறு பலமாகக் கோரி வருகின்றது.

அவர்களுடன் கலந்து பேசி இணக்கப்பாட்டுக்கு வருமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் மீள்குடியேற்றப் பிரிவினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் நடைபெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலம் உள்ளன. அவர்களை அவர்களது பூர்வீக கிராமங்களில் மீள்குடியேற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மீள்குடியேற்றப் பிரிவினரால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

தற்போது 1502 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் அனுமதிக்கப்படாமல் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளன என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

212 குடும்பங்களுக்கு காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு விரைவில் வீடுகள் வழங்கப்படும். காணி இல்லாத ஏனைய அனைவருக்கும் காணிகளை விரைவில் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கான காணிகள் எதிர்காலத்தில் விடுவிக்கப்படும்.

இதேவேளை, இந்த வருடம் கண்ணிவெடிகளை அகற்றி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக அரசு 2550 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்திக்காக 2000 மில்லியன் ரூபாவும், உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபாவும், கண்ணிவெடி அகற்றலுக்கு 50 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேறியுள்ள மக்களுக்குத் தேவையான நீர், மின்சாரம், மலசலகூட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். ஒரு குடும்பத்துக்கு 30,000 ரூபா வழங்கப்படும்.

இதேவேளை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதியுதவியுடன் சுத்தமான குடி தண்ணீரை வழங்குவதற்காக 50 நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு மையங்களை நிறுவும் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக மேலும் 50 புதிய நனோ நீர் திட்டங்களை இந்த வருட இறுதிக்குள் நிர்மாணிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.- என்றார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் செலவநகர் நீர் சுத்திகரிப்பு நிலையம், உருதிபுரம் கிழக்கு நீர் சுத்திகரிப்பு நிலையம், வவுனியா மாவட்டத்தில் கங்கன்குளம் நீர் சுத்திகரிப்பு நிலையம், வவுனியா தெற்கில் அவரந்தலாவ நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை அமைச்சர் மக்கள் பாவனைக்குத் திறந்து வைத்தார்.





# வசதி குறைந்த மாணவர்களுக்கு பாதணிகள் இன்று வழங்கிவைப்பு!

காரைதீவிலுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு ஆஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியமான 'ஒஸ்கார்' ஒரு தொகுதி பாதணிகளை வழங்கிவைத்தது.

காரைதீவு விக்னேஸ்வரா வித்தியாலயம், விஷ்ணு வித்தியாலயம் மற்றும் கண்ணகி இந்து வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் இன்று (08) திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

ஒஸ்கார் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டார்.

லண்டனில் வாழும் காரைதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி கருணாநிதி, வேலுப்பிள்ளை உதயகுமார் ஆகியோர் இதற்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தனர்.

ஒஸ்கார் சார்பில் ஆசிரியர்களான கே.லோகநாதன், இ.இரத்தினகுமார் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

குறித்த பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் இந்த உதவியை நல்கிய ஒஸ்கார் அமைப்புக்கு நன்றி தெரிவித்தனர்.

# பாரிஸ் மாநகரில் நடைபெற்ற 51 ஆவது இலக்கியச் சந்திப்பு









பாரிஸ் மாநகரில் 51 ஆவது இலக்கியச் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.

புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள படைப்பாளிகள், இலக்கிய ரசிகர்கள், ஆர்வலர்களால் பல வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இலக்கியச் சந்திப்பு நிகழ்வுகள் ஐரோப்பாவில் ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், டென்மார்க், நோர்வே, சுவிஸ் மற்றும் கனடா, இலங்கை எனப் பல்வேறு நாடுகளிலும் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

கொரோனாக் காலத்தில் மட்டும் இலக்கியச் சந்திப்பு தடைப்பட்டிருந்தது.

கடந்த வருடம் 50 ஆவது இலக்கியச் சந்திப்பு அனலைதீவில் நடைபெற்றது.

இலக்கியச் சந்திப்புக்கென நிரந்தர நிர்வாகக் குழு இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் இதனை நடத்துவதற்கெனப் பொறுப்பேற்றுக்கொள்பவர்கள் தங்களுக்குள் ஓர் குழுவை அமைத்து இலக்கியச் சந்திப்புக்கான ஒழுங்குகளை மேற்கொள்வது வழமை.

அந்த வகையில் 51 ஆவது இலக்கியச் சந்திப்பு பாரிஸ் மாநகரில் நடைபெற்றது.

முதல் நாள் நிகழ்வு தில்லை நடேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ‘காலம்’ சஞ்சிகை குறித்து டானியல் ஜெயந்தன், ‘ஜீவநதி’ குறித்து மாதவி, ‘மறுகா’ குறித்து அகரன், ‘வளர்’ குறித்து அசுரா ஆகியோர் அறிமுக உரைகளை நிகழ்த்தினர்.

அடுத்ததாக 51 ஆவது இலக்கியச் சந்திப்பு கதைமலர் ‘இமிழ்’ வெளியிடப்பட்டது. பிற்பகல் ‘மலையக இன அடையாளம் பற்றிய பன்முகப் போக்கும் நோக்கும்’ என்ற பொருளில் குணரட்ணராஜா தலைமையில் என். சரவணன் உரையாற்றினார்.

தொடர்ந்து அரவிந்த் அப்பாத்துரை தலைமையில் ‘தமிழ் – பிரெஞ்சு மொழிபெயர்ப்பு இலக்கியங்கள்’ என்னும் தலைப்பில் லெற்றிஷியா இபானேஸ் (பிரெஞ்சுப் பெண்மணி) சிறந்த உரை வழங்கினார்.

‘இரு சகாப்தங்களுக்கு மேலான திருநங்கைகள் குறித்த தமிழிலக்கிய முன்வைப்புகளும் அதுசார் சிக்கல்பாடுகளும்’ என்னும் பொருளில் விஜயன் தலைமையில் ஹரி ராஜலட்சுமி உரையாற்றினார்.

‘சமகாலத்தில் இலங்கை இன முரண்பாடுகளின் திசை’ என்னும் பொருளில் றஷ்மி தலைமையில் ராகவன் உரையாற்றினார்.

தொடர்ந்து MADE IN SRI LANKA என்ற தனி நடிப்பு ஆற்றுகையை வி. பாஸ்கர் சிறப்பாக வழங்கினார்.

இரண்டாம் நாள் நிகழ்வு தர்மு பிரசாத் தலைமையில் ஆரம்பமானது. ‘நினைவு மறந்த கதை’ நூல் குறித்து கலா சிறிரஞ்சன், ‘சற்றே பெரிய கதைகளின் புத்தகம்’ குறித்து நெற்கொழுதாசன், ‘ஓய்வு பெற்ற ஒற்றன்’ குறித்து வானிலா, ‘வயல் மாதா’ குறித்து நவமகன் ஆகியோர் அறிமுக உரையாற்றினர்.

கே. டானியலின் ‘சாநிழல்’ நாவல் குறித்து வி. ரி. இளங்கோவன் உரை நிகழ்த்தினர். இந்நாவலின் அறிமுக நிகழ்வுகள் அண்மையில் யாழ்ப்பாணம், சென்னை, தஞ்சாவூர், கனடா – ரொறன்ரோ ஆகிய இடங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

தொடந்து ‘பாலியல் சுரண்டல் – எதிர்கொள்ளலும் பொறுப்புக் கூறலும்’ என்னும் பொருளில் விஜி தலைமையில் உமா உரையாற்றினார்.

பிற்பகல் ‘போரும் ஏகாதிபத்தியமும்’ என்னும் தலைப்பில் உதயகுமார் தலைமையில் நிர்மலா ராஜசிங்கம், கலையரசன் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து எம். ஆர். ஸ்ராலின் தலைமையில் ‘தமிழ் இனப்புல இயக்கவியல் (கோலாம்பூர் – சிங்கப்பூர் – பாரிஸ்)’ என்னும் பொருளில் டெலோன் மாதவன் உரையாற்றினார்.

‘இலங்கையில் சாதியம் – கள அனுபவம்’ என்னும் தலைப்பில் துரைசிங்கம் தலைமையில் தேவதாசன் உரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து 52 ஆவது இலக்கியச் சந்திப்பை சுவிஸ் நாட்டில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

சுவிஸ், லண்டன், ஜேர்மனி, நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே நாடுகளிலிருந்து வந்த பலர் இலக்கியச் சந்திப்பில் இரு நாள்களும் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை வலயத்தில் நூல் வெளியீட்டு விழா!





( வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் வருடாந்த அமுலாக்க திட்டம் என்ற நூல் வெளியீட்டு விழா திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நுஸ்ரத் நிலோபரா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் செய்யட் உமர் மௌலானா கலந்து கொண்டார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யசீர் அரபாத் மொகைடீன், திருமதி நிதர்சினி மகேந்திரகுமார், அப்துல் மஜீத், எச் .நைரூஸ்கான், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.நசீர், பி.பரமதயாளன், யூஎல். மகுமூட்லெவ்வை, கணக்காளர் சீ.திருப்பிரகாசம், ஆசிரியர் பயிற்சி நிலைய முகாமையாளர் எஸ்.சிவேந்திரன், பாடசாலை வேலைகள் அதிகாரி இ.ஏகாம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலய வருடாந்த அமுலாக்கல் திட்டகைநூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

விழா நிகழ்வுகளை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தினார்.

விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் வளவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# நாட்டிய மாணவர்களுக்கு தலைக்கவசம் அணிவிப்பு

(மஸ்கெலியா)

நுவரெலியா காமினி தேசிய பாடசாலையில் நாட்டியம் கற்கும் 46 மாணவர்களின் நடன நிகழ்வில் அவர்களுக்குத் தலைக்கவசம் மற்றும் பைம்பட்டை முறைப்படி அணிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா காமினி தேசிய பாடசாலையின் அதிபர் நிமல் குமாரதாச, நடன ஆசிரியை நயனா விதானபத்திரன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிருத்யாபிஷேக விழா சுமேத லக்ஷனின் பூரண ஆதரவுடன் நடைபெற்றது.

இதற்காகச் சுமார் 60 நடன ஆசிரியைகள், ஆசிரியர்கள் உறுதுணையாகி, தலைக்கவசம், பைம்பாட்டுகள் அணிவிக்கப்பட்டு, தீபத்திருவிழாவும் இடம்பெற்றது.

நிருத்யாபிஷேக விழா மற்றும் கலாச்சார அம்சங்களை காண பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# கச்சதீவை அரசியலுக்காகக் கையாள்வதை தமிழகமும் மத்திய அரசும் கைவிடவேண்டும்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என். எம்.ஆலம் தெரிவிப்பு




(மன்னார் )

இந்தியா மத்திய அரசிலும் தமிழகத்திலும் புதிதாக ஒரு நிலைப்பாடாக கச்ச தீவு விடயம் தோன்றியுள்ளது. எனவே கச்சதீவை அரசியலுக்காகக் கையாள்வதை தமிழகமும் மத்திய அரசும் கைவிட வேண்டும் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என். எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை (08) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இந்தியா மத்திய அரசிலும் தமிழகத்திலும் புதிதாக ஒரு நிலைப்பாடாக கச்ச தீவு விடயம் தோன்றியுள்ளது. இதை அவர்கள் அரசியலுக்கு பயன்படுத்த கூறி இருந்தாலும் அங்குள்ள மீனவர்களைக், குறிப்பாகச் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் இருந்து மாற நினைக்கும் மீனவர்களை இந்தத் தொழிலில் உள் வாங்கி அவர்களை உற்சாகமூட்டுவதாக அமைகிறது.

மீண்டும் மீண்டும் அவர்களைச் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்கும், சட்டவிரோதமாக இலங்கை கடல் பகுதிக்குள் நுழைந்து மீன் பிடி நடவடிக்கையை முன்னெடுக்க ஆதரிப்பதாகவும் காணப்படுகின்றது.

அரசியல் நோக்கம் ஒரு புறம் இருந்தாலும், இலங்கையில் தனது ஆதிக்கம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழகத்திலும் இந்திய மத்திய அரசும் மிகவும் கவனமாக செயற்படுகிறது. கச்ச தீவு விடயத்தைப் பல தடவை தமிழக அரசு தான் மேலோங்கச் செய்துள்ளது.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் ஒவ்வொரு காலகட்டத்திலும் கச்ச தீவை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தியது தமிழகம்.

தமிழக அரசின் ஒவ்வொரு கால கட்டத்திலான கோரிக்கையை மத்திய அரசு தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது. இன்று அந்த சாதகத்தின் வெளிப்பாடுதான் தமிழகம் தான் கச்ச தீவை வழங்கியதற்கு முழுக் காரணம் என்று இன்று அவர்களின் அரசியலை வளர்த்துக் கொள்வதற்காக இந்த விடயத்தை மீண்டும் மீண்டும் ஒரு பூதாகரமான விடயமாக மாற்றியுள்ளனர்.

இலங்கை மீனவர்களை பொறுத்தவரையில், குறிப்பாக வட பகுதி மீனவர்களைப் பொறுத்தவரையில் இவர்களுக்கான ஒரே நிலைப்பாடு இந்திய மீனவர்கள் எமது எல்லையை தாண்டக்கூடாது. எமது எல்லைக்குள் வந்து சட்ட விரோதமான இழுவை மடி தொழிலை முன்னெடுக்க கூடாது என்ற நிலைப்பாட்டில் தெளிவாக இருக்கின்றனர். எமது மீனவர்கள் முகம் கொடுக்கும் துன்பங்களும்,போராட்டமும் அதனை வலியுறுத்தியதாக உள்ளன.

தமிழக அரசாக இருந்தாலும், இந்திய அரசாக இருந்தாலும் அவர்கள் அரசியலுக்காக இந்த விடயத்தை மீண்டும் மீண்டும் பேசித் தமிழக மீனவர்களை உற்சாகப் படுத்துவதும் இந்த விடயத்தை கேலிக் கூத்தாக்குவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இரு நாடுகளுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்ட ஒப்பந்தங்களை கன்னியமாக பார்த்துக் கொள்ள வேண்டும். அரசியலுக்காக பேசப்படும் விடயமாக இருந்தால் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கு இடையில் உள்ள உறவிலும் மக்களின் மனதிலும் பாரிய எதிர்ப்பை உருவாக்கக்கூடும்.

எனவே கச்சதீவை அரசியலுக்காக கையாள்வதை தமிழகமும், மத்திய அரசும் கைவிட வேண்டும். இலங்கை அரசும் வடபகுதியில் உள்ள தமிழ் பிரதிநிதிகளும் இந்தக் கருத்துக்கு எவ்வித கருத்துக்களையும் கூறுவதாக இல்லை.

வட பகுதி மீனவர்கள் தொடர்ந்து போராட்டங்களையும் எதிர்ப்பையும் முன்னெடுத்து வருகின்ற போதும் அவர்கள் மௌனிகளாக உள்ளனர்.

கடற்தொழில் அமைச்சர் அதற்கு மேலாக ஒரு படி சென்று இந்திய மீனவர்களின் வருகையைக் கட்டுப்படுத்த ஒரு புறம் கருத்தைக் கூறுகிறார். மறுபுறம் இந்திய கம்பெனிகளின் அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்களுக்கு கதவை திறந்து விடுகின்றார். அவர்கள் வந்து செயல்பாட்டை முன்னெடுக்க ஆதரவு வழங்குகின்றார். அவர் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.- என்றார்.

# றமழான், சித்திரை பண்டிகைகளை முன்னிட்டு கடற்கரைப் பகுதி சுத்திகரிப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

புனித றமழான் நோன்பு பெருநாள் மற்றும் தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகை என்பவற்றை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கடற்கரைப் பகுதிகள் விசேடமாக சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகின்றன.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் பணிப்புரை மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸியின் ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸ் மேற்பார்வையில் திண்மக் கழிவகற்றல் மற்றும் வேலைத் தொழிலாளர்கள் இணைந்து இன்று திங்கட்கிழமை (08) சுத்திகரிப்பு பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் உள்ள கடற்கரைப் பகுதிகள் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

# சமுர்த்தி அபிமானி வர்த்தக கண்காட்சி






**(எம் எப். நவாஸ்)**

நோன்பு பெருநாள் மற்றும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவும் இணைந்து நடாத்திய சமுர்த்தி "அபிமானி" வர்த்தக கண்காட்சியும் சந்தையும் இன்று (08) அட்டாளைச்சேனை பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் பி.ரீ.எம் இர்பான் தலைமையில் இடம் பெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம் ஏ சி. அகமது ஷாபிர் கலந்து கொண்டார். உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹீஜா முஸாபீர், கணக்காளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர், ஏனைய சமுர்த்தி முகாமையாளர்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் மற்றும் ஏனைய உற்பத்தி பொருள்கள் என பல வகையான உற்பத்தி பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டன.

# கல்முனை பிரதேச செயலாருக்கு சேவைப் பாராட்டும் கௌரவிப்பும்




**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை பிரதேச செயலாளராக 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கடமையேற்று இன்று வரை தொடர்ந்து பல சேவையாற்றிவரும் ஜே. லியாகத் அலியை கல்முனை மக்கள் கௌரவித்துள்ளனர்.

ஆஷாத் ப்ளாஸா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற கல்முனையன்ஸ் போரத்தின் வருடாந்த இப்தார் ஒன்றுகூடல் நிகழ்வின் போது இந்தக் கௌரவம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டது.

கல்முனை மாநகர சபை எந்திரியர் ஜௌஸி அப்துல் ஜப்பார், உதவி திட்டமிடல் பணிப்பாளரும், கல்முனையன்ஸ் போரத்தின் கணக்காய்வாளருமான ஏ. எல். மஜீட், போரத்தின் சிரேஷ்ட செயற்பாட்டாளர் ஜலீல் சுலைமான், போரத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எம். எம். காமில் மற்றும் போரத்தின் நிறைவேற்று பணிப்பாளர் முபாரிஸ் எம். ஹனீபா ஆகியோரால் பிரதேச செயலார் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

கல்முனையின் முதுசம் முன்னாள் ஜித்தாவுக்கான தூதுவரும், முன்னாள் வக்பு சபை உறுப்பினருமான டாக்டர் ஏ. உதுமாலெப்பை, கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், கல்முனை நகர ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவருமான அப்துல் ரஸாக் ஜவாத், சிரேஷ்ட சட்டத்தரணி யூ. எம். நிஷார், தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி எம். எச். தௌபீக், ஜம்இய்யத்துல் உலமா கல்முனைக் கிளை தலைவர் மௌலவி ஏ. எல். முர்ஷித் ஆகியோர் நினைவுச் சின்னம் வழங்கினர்.





# உலர் உணவுப் பொதிகள் மாவடிப்பள்ளியில் விநியோகம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

புனித ரமழானை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளி பிரதேச ஜம்மியதுல் உலமா சபையின் உப தலைவர் மௌலவி எம்.ஐ.எம். றியால் ஹாமி மூலம் அடையாளப்படுத்தப்பட்ட பயனாளர்களுக்கு வை.டபிள்யூ. எம்.ஏ மற்றும் சி.எஸ்.எம்.டபிள்யூ.ஏ பேரவைகளின் ஒருங்கிணைப்பில் கல்முனை ரஹ்மத் பவுண்டேசனால் உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவடிப்பள்ளி அல்-அஷ்ரஃப் மகா வித்தியாலய ஹுஸைன் ஞாபகார்த்த மண்டபத்தில் சனிக்கிழமை (06) இடம்பெற்ற விநியோக நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவற்றை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் மாவடிப்பள்ளி ஜம்மியதுல் உலமா தலைவர் ஏ.எம். முஹம்மது தம்பி மௌலவி, மாவடிப் பள்ளி ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் வை.ஏ.மனாப் உட்பட ஊர்ப் பிரமுகர்கள், பயனாளிகள், பிரதேசவாசிகள் மற்றும் பவுண்டேசன் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



# திரிசாரணர்களுக்கு சின்னம் சூட்டல்

(த.சுபேசன்)

காங்கேசன்துறை சாரணர் மாவட்டக் கிளைச் சங்கத்தின் திரிசாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு வெள்ளிக்கிழமை காங்கேசன்துறையில் இடம்பெற்றது.

நிகழ்வில் காங்கேசன்துறை சாரணர் மாவட்ட ஆணையாளர் எஸ்.கிருபானந்தன், உதவி மாவட்ட ஆணையாளர் தேவரூபன் மற்றும் பெண் சாரண பொறுப்பாசிரியை கிருசாந்தி ஆகியோர் கலந்து கொண்டு திரி சாரணர்களுக்கான சின்னங்களைச் சூட்டி வைத்தனர்.

நிகழ்வில் 15 திரி சாரணர்களுக்குச் சின்னம் சூட்டப்பட்டது.





# இது மக்களுடன் ஒன்றாத அரசு; பா.ஜ.கவை விமர்சித்தார் கமல்

'இது மக்களுடன் ஒன்றாத அரசு' என பா.ஜ.கவை மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் விமர்சித்துள்ளார்.

வடசென்னை தி.மு.க. வேட்பாளர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து சென்னை ஓட்டேரியில் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் உரையாற்றுகையில்,

"கட்சி தொடங்கிய நாளில் இருந்து வடசென்னைக்கு அதிக முறை வந்து செல்பவன் நான்.

என்னை போன்ற பலரின் கோரிக்கைக்கு இணங்க 1000 கோடி ரூபா வடசென்னை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிசை மாற்று வாரியம் என்னும் வார்த்தையை கொண்டு வந்தவர் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி.

குடிசையெல்லாம் மாற்ற வேண்டும் என்ற எண்ணம் வந்து 40 ஆண்டுகளாகின்றன. அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், மத்தியிலோ வெளிநாடுகளில் இருந்து யாரேனும் வந்தால் குடிசை மறைப்பு வாரியம் என்பது போல் குடிசையை திரை போட்டு மறைத்து விடுகின்றனர்.

அந்த ஏழ்மை அவர்களால் வந்ததுதானே. இங்கு இருப்பதைபோல பெண்களுக்கு உரிமைத் தொகை, கட்டணமில்லா பேருந்து பயணம் போன்றவை எத்தனை மாநிலங்களில் வழங்கப்படுகிறது என பார்க்க வேண்டும்.

குஜராத் மாடலில் இதெல்லாம் வழங்கப்படவில்லை. அவர்கள் 2050 இல் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை, தமிழகம் இப்போதே அடைந்துவிட்டது. ஊழல் என பேசுபவர்கள் தேர்தல் பத்திரம் என்னும் உலக மகா ஊழலை சட்டத்தை வளைத்து செய்திருக்கின்றனர். 10 ஆண்டுகாலம் நடந்த ஆட்சி டிரெய்லர்தான்.

மெயின் படம் போட காத்துக் கொண்டிருக்கின்றனர். உணவு, உடை உள்ளிட்டவற்றை அவர்கள் முடிவு செய்வார்கள். அது நடக்கக் கூடாது. இது மக்களுடன் ஒன்றாத அரசு." - என்றார்.

# பிரச்சாரப் பணியிலிருந்து விலகினார் நடிகை குஷ்பு



எலும்பு முறிவு பிரச்சினையால் மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட முடியவில்லை என்றும் பிரச்சாரத்தில் ஈடுபடுவதில் இருந்து ஓய்வு அளிக்குமாறும் கோரி பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி. நட்டாவுக்கு தேசிய செயற்குழு உறுப்பினர் நடிகை குஷ்பு கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"டில்லியில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட எதிர்பாராத விபத்தில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. கடந்த 5 ஆண்டுகளாக இந்த பிரச்சினையுடன் இருந்து வருகிறேன்.

பிரச்சாரத்தில் ஈடுபட்டால், அது மேலும் எனது உடல் நிலையை மோசமடைய செய்யும் என எச்சரித்துள்ளனர். பா.ஜ.கவின் அர்ப்பணிப்புள்ள தொண்டன் என்ற முறையில், எனது மருத்துவரின் அறிவுரைக்கு எதிராக வலி மற்றும் வேதனை இருந்த போதிலும் என்னால், முடிந்தவரை உழைத்து பிரச்சாரம் செய்தேன்.

ஆனாலும், எலும்பு முறிவு பிரச்சினையால் என்னால் நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர முடியாத நிலையும், நீண்ட தூரம் பயணம் மேற்கொள்ள முடியாத சூழலும் ஏற்பட்டுள்ளது. எனவே, எனது உடல் நிலையை கருத்தில் கொண்டு என்னால் தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்காக என்னை மன்னிக்கவேண்டும்.

பிரச்சாரத்தில் ஈடுபடமுடியாதது மிகவும் மனவருத்தத்தை அளிக்கிறது. தற்போது உள்ள பிரச்சினை உயிருக்கு ஆபத்தான நிலை இல்லை என்றாலும், மருத்துவர்கள் சிகிச்சை மேற்கொள்ள அறிவுறுத்தியதால் என்னால் பிரச்சாரத்தில் ஈடுபட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் நான் தொடர்ந்து சமூக வலைதளங்களில் பா.ஜ.கவுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யவுள்ளேன்." - என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவைப் பிளவுபடுத்த இண்டியா கூட்டணி முயற்சி

## பிரதமர் நரேந்திர மோடி குற்றச்சாட்டு

இந்தியாவை பிளவுபடுத்த இண்டியா கூட்டணி முயற்சி செய்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு பிரதமர் மோடி நேற்று பிஹாரின் நவாதா மற்றும் மேற்குவங்கத்தின் கூச் பெகர், ஜல்பைகுரி உள்ளிட்ட பகுதிகளில் என்.டி.ஏ. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"ஒரு காலத்தில் பிஹாரில் காட்டாட்சி நடைபெற்றது. பெண்கள் வெளியே செல்ல அஞ்சினர். முதல்வர் நிதிஷ் குமார், சுஷில் குமார் மோடியின் அதிதீவிர நடவடிக்கைகளால் காட்டாட்சியில் இருந்து பிஹார் விடுதலை அடைந்தது.

பிஹாரின் நவாதா நகரில் நேற்று பா.ஜ.க. பிரச்சார கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங், மாநில பாஜக தலைவர் சாம்ராட் சவுத்ரி, எல்ஜேபி கட்சி தலைவர் சிராக் பாஸ்வான் உள்ளிட்டோர் பங்கேற்றனர். படம்: பிடிஐமத்திய அரசு சார்பில் நாடு முழுவதும் ரேஷனில் இலவசமாக உணவு தானியம் வழங்கப்படுகிறது. உஜ்வாலா திட்டத்தில் இலவசமாக சமையல் காஸ் இணைப்பு வழங்கப்படுகிறது.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவோம் என்று வாக்குறுதி அளித்தோம். இதனை வெற்றிகரமாக நிறைவேற்றி உள்ளோம். முத்தலாக் நடைமுறைக்கு தடை விதிக்க சட்டம் இயற்றப்பட்டது. ஆனால், இண்டியா கூட்டணிக்கு கொள்கையோ, லட்சியமோ கிடையாது. அந்த கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் ஊழலுக்கு அடிமையாக உள்ளனர். நாட்டை பிளவுபடுத்த முயற்சி செய்கின்றனர். தென்னிந்தியாவை தனிநாடாக பிரிப்போம் என்று காங்கிரஸ் தலைவர்கள் பகிரங்கமாக பேசுகின்றனர்.

மக்களவைத் தேர்தலில் இண்டியா கூட்டணியை சேர்ந்த மூத்த தலைவர் ஒருவர், தன்னை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க கோருகிறார். அவர் இதுவரை பிரச்சாரத்துக்கே செல்லவில்லை. மேற்குவங்கத்தை ஆட்சி செய்யும் திரிணமூல் காங்கிரஸ் ஊழலில் திளைக்கிறது. வாரிசு அரசியலை ஊக்குவிக்கிறது. எந்தவொரு அரசு திட்டத்துக்கும் லஞ்சம்




கொடுத்தால் மட்டுமே மாநில அரசு தரப்பில் அனுமதி வழங்கப்படுகிறது. ஆளும் திரிணமூல் அரசுக்கு எதிராக சந்தேஷ்காலி பெண்கள் போர்க்கொடி உயர்த்தி உள்ளனர். அங்கு நடைபெற்ற கொடூரங்களுக்கு காரணமான அனைவரும் சிறையில் தள்ளப்படுவார்கள்.

மேற்குவங்கத்தில் விசாரணை நடத்த செல்லும் மத்திய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் மீது சமூக விரோத கும்பல்கள் தாக்குதல் நடத்துகின்றன. முதல்வர் மம்தா தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் அரசு சர்வாதிகார ஆட்சியை நடத்தி வருகிறது. நமது நாட்டில் சுமார் 70 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சியை பார்த்தோம். கடந்த 10 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சி நடைபெறுகிறது. இந்த ஆட்சியில் ஒட்டுமொத்த உலகத்தின் பார்வையும் இந்தியா பக்கம் திரும்பி உள்ளது.

தற்போதைய மக்களவைத் தேர்தல் மத்தியில் வலுவான ஆட்சியை ஏற்படுத்த வேண்டிய தேர்தல். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அண்மையில் பேசும்போது, பிரதமர் மோடி இதர மாநிலங்களில் காஷ்மீர் குறித்து பேச மறுப்பது ஏன் என்று கேள்வி எழுப்பி உள்ளார். காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பி இருக்கிறார்.

ஆனால் காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370 ஆவது சட்டப்பிரிவுக்கு பதிலாக 371 என்று அவர் தவறுதலாக கூறியிருக்கிறார். இது வேடிக்கையாக இருக்கிறது. காங்கிரஸை பொறுத்தவரை காஷ்மீரை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. எங்களைப் பொறுத்த வரை காஷ்மீர் இந்தியாவின் தலை ஆகும்." – என்றார்.

# ரயிலில் கொண்டு செல்லப்பட்ட 4 கோடி ரூபா பணம் பறிமுதல்

சென்னையில் இருந்து நெல்லைக்கு ரயிலில் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 4 கோடி ரூபா பணத்தை படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக திருநெல்வேலி தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் நயினார் நாகேந்திரனின் விடுதி ஊழியர் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் மக்களவை தேர்தல் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெற உள்ளது. இதையொட்டி, வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருள்கள் கொடுப்பதை தடுக்க பறக்கும் படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், ரகசிய தகவலின் பேரில், தாம்பரம் போலீஸாரும், பறக்கும்



படை அதிகாரிகளும் நேற்று முன்தினம் இரவு தாம்பரம் ரயில் நிலையத்துக்கு வந்த எழும்பூர் – நெல்லை எக்ஸ்பிரஸ் ரயிலில் சோதனை நடத்தினர்.

இதன்போது, உரிய ஆவணங்கள் இல்லாததால், பணத்தை பொலிஸார் பறிமுதல் செய்தனர். அவர்கள் 3 பேரையும் தாம்பரம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்று விசாரணை நடத்திவருகின்றனர் .





# இஸ்ரேலின் ஹைபா நகரை குறிவைத்து ஈராக் ஆளில்லா விமானங்கள் தாக்குதல்

இஸ்ரேலின் ஹைபா நகரை குறிவைத்து ஈராக் ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலில் அங்குள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தீப்பிடித்து எரிந்ததுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அங்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளியாகாத நிலையில், இந்த தாக்குதலுக்கு ஈராக்கை தளமாக கொண்டு செயல்படும் கிளர்ச்சியாளர்கள் குழு பொறுப்பேற்றுள்ளதாக கூறப்படுகிறது.

எனவே, ஈராக் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்த வாய்ப்பு இருப்பதாக அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அமெரிக்காவில் மேலும் ஒரு இந்திய மாணவர் உயிரிழப்பு

அமெரிக்காவின் ஒகியோ மாகாணத்தின் கிலீவ்லேண்ட் பகுதியில் தெலுங்கு மாணவர் உமா சத்ய சாய் கட்டே என்பவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்காவில் உயிரிழந்த இந்திய மாணவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவில் இந்தாண்டு தொடக்கத்திலிருந்தே இந்தியாவைச் சேர்ந்த மாணவர்கள் பலர் உயிரிழந்து வருகின்றனர்.

கொலை, விபத்து, மர்ம உயிரிழப்பு உள்ளிட்ட காரணங்களால் இந்திய மாணவர்களின் உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. அமெரிக்காவில் ஏற்கெனவே 13 மாணவர்கள் உயிரிழந்த நிலையில், தற்போது 14 ஆவது மாணவனாக சாய் கட்டே என்பவர் உயிரிழந்துள்ளார்.

இதனால், அமெரிக்காவில் இந்திய மாணவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. இந்த விவகாரம் குறித்து அமெரிக்க உளவுப் பிரிவு எப்.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என 'தி குளோபல் இந்து ஹெரிடேஜ் அறக்கட்டளை' சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இந்திய மாணவர்களின் உயிரிழப்பு கவலை அளிப்பதாக, 175 கடிதங்கள் வந்துள்ளன என நியூயோர்க்கில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.





இஸ்ரேல் போரின் 6 மாத பூர்த்தி:

# காசாவில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் பிரித்தானியா

காசாவில் குழந்தைகளுக்காக மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தத்தை உடனடியாக கொண்டுவர வேண்டுமென பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு, இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கி 6 மாதங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், காசாவில் கடல்சார் உதவி வழித்தடத்தை அமைப்பதற்கான ஆதரவையும் பிரித்தானிய உறுதிப்படுத்தியுள்ளது.

அதேவேளை, இஸ்ரேலின் வரலாற்றில் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு யூதார்கள் மிக மோசமான இழப்பைச் சந்தித்த மிக பயங்கரமான தாக்குதல் என்றும் பிரித்தானியா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் போரினால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதுடன் தற்போது, காசாவில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், இஸ்ரேலின் இந்த படையெடுப்பிற்கு உலக நாடுகள் பலவும் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிரியா குண்டு வெடிப்பில் 7 குழந்தைகள் உயிரிழப்பு



தென்மேற்கு சிரியாவின் டரா மாகாணம் அருகே வீதியோரத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் வெடித்ததில் 7 குழந்தைகள் பலியாகியுள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வீதியில் குழந்தைகள் சிலர் விளையாடி கொண்டிருந்த போது அங்கே வீதியோரத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் அடுத்தடுத்து பயங்கர சத்தத்துடன் வெடித்தன என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெடிகுண்டு விபத்தில் சிக்கி 7 குழந்தைகள் உயிரிழந்தனர். மேலும், 2 பேர் படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கூறப்படுகிறது.

பக்கங்கள் 04


கனடா முரசு

திங்கட்கிழமை 08/04/2024

## யோர்க் வாகன விபத்தில் இருவர் உயிரிழந்தனர்!

ஒன்ராரியோ,ஏப்ரல்08
யோர்க் பிராந்தியத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ப்ரோக் டவுனஷொப்பில், C2▶



# கனடாவில் பல இடங்களிலும் இன்று முழு சூரியகிரகணத்தைக் காணலாம்!

**ஒன்ராரியோ,ஏப்ரல்08**
**இன்றைய தினம் கனடாவின் பல இடங்களிலும் சூரிய கிரகணத்தைப் பாதுகாப்பான முறையில் பார்க்க முடியும்.**

**சில முக்கிய இடங்களில் சூரிய கிரகணத்தை மேகங்களை மறைக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.**

எனினும், கியூபெக் மற்றும் கரையோரப் பகுதிகளில் சூரிய கிரகணத்தைப் பாதுகாப்பான கண்ணாடிகளை அணிந்து கொண்டு பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சூரிய கிரகணத்தின் போது வானிலையில் மாற்றம் ஏற்படக் கூடும் என்பதனால், உள்ளூர் வானிலை குறித்து கவனம் செலுத்துமாறும் வானியலாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

ஒன்ராரியோவில் தெளிவான வானத்தை காண்பது அரிதாக இருக்கலாம் எனவும், சில இடங்களில் மாத்திரம் தெளிவாக இருக்கும் எனவும் சுற்றுச்சூழல் கனடாவைச் சேர்ந்த வானிலை ஆய்வாளர் சோன் அகியாமா தெரிவித்துள்ளார்.

சூரிய கிரகணத்தின் நிறைவின் போதே ஒன்ராரியோவில் மிகச் சிறந்த காட்சியை காணக் கூடியதாக இருக்கும் என அவர் கூறியுள்ளார்.

தென்மேற்கு ஒன்ராரியோவில், பொயின்ட் பீல் தேசிய பூங்காவில் சூரியன் மற்றும் மேகங்கள் கலந்து காணப்படும் எனவும், ஹெமில்டன்-நயாகரா பகுதியிலும், டொரன்டோவிலும் நிலைமை மோசமடைந்து, மேகக்கூட்டம் நிறைந்திருக்கும் எனவும், இதனால் தெளிவாக சூரிய கிரகணத்தை காண முடியாது எனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

கியூபெக்கைச் சேர்ந்த சூரிய கிரகணத்தைப் பாரக்க விரும்புவர்களுக்கு தெளிவான காட்சி கிடைக்கும் என மொன்ரியலைச் சேர்ந்த சுற்றுச்சூழல் கனடாவின் வானிலை C2▶

# செயற்கை நுண்ணறிவு ஆற்றலை கட்டியெழுப்ப 2.4 பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்படுகின்றது!

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவிப்பு




ஒன்ராரியோ,ஏப்ரல்08 – செயற்கை நுண்ணறிவு ஆற்றலை கட்டியெழுப்புவதற்கு 2.4 பில்லியன் டொலர்களை அடுத்த வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கவுள்ளதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அதில் 2 பில்லியன் டொலர்கள் கணினி இயலுமைகள் மற்றும் தொழிநுட்ப உட்கட்டமைப்புக்கு அணுகலை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டிருக்கவுள்ளது.

வரவு – செலவுத் திட்டத்திற்கு முன்னரான சுற்று விஜயத்தின் ஒரு கட்டமாக மொன்ரியல் செயற்கை நுண்ணறிவு நிறுவனம் ஒன்றில் வைத்து C2▶




## யோர்க் வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்திய சாலை 15 க்கு தெற்கே உள்ள தோரா சைட்ரோடில் ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

யோர்க் பிராந்திய பொலிஸாருக்கு அதிகாலை 3:20 மணியளவில் விபத்து குறித்து அழைப்பு கிடைத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகன சாரதி வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்தமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## செயற்கை நுண்ணறிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ட்ரூடோ இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.

செயற்கை நுண்ணறிவு கணினி நிதி தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்களுடன் அரசாங்கம் விரைவில் கலந்துரையாடவுள்ளதாக பிரதமர் ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

அனைவருக்கும் சாதகமான பயன்களை தரக்கூடிய வகையில் நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தச் செய்வதே தமது அரசாங்கத்தின் நோக்கம் என அவர் கூறியுள்ளார்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வாளர் டொமினிக் மார்டெல் தெரிவித்துள்ளார்.

பிற்பகல் 3.30 முதல் மற்றும் 4.30 வரை சூரிய கிரகணத்தின் பாதையை கியூபெக்கில் தெளிவாகக் காண முடியும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நியூபவுன்லாந்து மற்றும் லெப்ரடோரில் சிறிது நேரம் மேகக் கூட்டம் விலகும் போது சூரிய கிரகணத்தைக் காணக் கூடியதாக இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நியூபிரவுன்ஸ்விக், பிரின்ஸ் எட்வர்ட் தீவு என்பவற்றில் சூரிய கிரகணத்தை காண்பதற்கான தெளிவான வானம் காணப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சூரிய கிரகணத்தை காண்பதற்காகக் கூடியுள்ள ஆயிரக்கணக்கானோரின் பாதுகாப்புக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என நயாகரா பிராந்திய பொலிஸ் சேவை தெரிவித்துள்ளது.

சூரிய கிரகணத்தை காண்பதற்கு மிகவும் பொருத்தமான இடமாக நயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதி அறிவிக்கப்பட்ட நிலையில், ஆயிரக்கணக்கானோர் சூரிய கிரகணத்தை காண்பதற்காக அங்கு சென்றுள்ளனர்.

இதன் காரணமாக கடந்த வாரத்தில் நயாகரா நகரில் நயாகரா மேயர் ஜிம் டியோடாட்டி அவசர கால நிலையை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

சூரிய கிரகணத்தை காணக் கூடிய நேரங்கள்:

ஏஜெக்ஸ், கிரகணம் பிற்பகல் 2:05 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:20 மணிக்கு, கிரகணம் மாலை 4:32 மணிக்கு முடிவடைகிறது.

பெர்ரி :- மதியம் 2:05 மணிக்கு கிரகணம் தொடங்கி, 3:19 மணிக்கு உச்சம், 4:31 மணிக்கு கிரகணம் முடியும்.

பிரம்டன் :- கிரகணம் மதியம் 2:04 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:19 மணிக்கு, கிரகணம் 4:31 மணிக்கு முடிவடைகிறது.

பேர்லிங்டன் :- மதியம் 2:04 மணிக்கு கிரகணம் தொடங்கி, 3:18 மணிக்கு உச்சம், 4:31 மணிக்கு கிரகணம் முடியும். மொத்தம் ஒரு நிமிடம் 28 வினாடிகள் நீடிக்கும்.

கோலேடன்:- கிரகணம் பிற்பகல் 2:04 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:19 மணிக்கு, கிரகணம் மாலை 4:31 மணிக்கு முடிவடைகிறது.

குலெப் :- கிரகணம் பிற்பகல் 2:03 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:18 மணிக்கு, கிரகணம் 4:30 மணிக்கு முடிவடைகிறது.

ஹெமில்டன்:- கிரகணம் மதியம் 2:03 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:18 மணிக்கு.. கிரகணம் 4:31 மணிக்கு முடிவடைகிறது. மொத்தம் ஒரு நிமிடம் 50 வினாடிகள் நீடிக்கும்.

கிங்ஸ்டன் :- கிரகணம் பிற்பகல் 2:09 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:22 மணிக்கு, கிரகணம் மாலை 4:34 மணிக்கு முடிவடைகிறது. மொத்தம் மூன்று நிமிடங்கள் மற்றும் நான்கு வினாடிகள் நீடிக்கும்.

கிச்சனர் :- மதியம் 2:03 மணிக்கு கிரகணம் தொடங்கி, 3:18 மணிக்கு உச்சம், 4:30 மணிக்கு கிரகணம் முடியும்.

லண்டன் :- கிரகணம் மதியம் 2:01 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:17 மணிக்கு, கிரகணம் 4:29 மணிக்கு முடிவடைகிறது.

மார்க்கம் :- மதியம் 2:05 மணிக்கு கிரகணம் தொடங்கி, 3:20 மணிக்கு உச்சம், 4:31 மணிக்கு கிரகணம் முடியும்.

மில்டன்:- மதியம் 2:04 மணிக்கு கிரகணம் தொடங்கி, 3:19 மணிக்கு உச்சம், 4:31 மணிக்கு கிரகணம் முடிவடைகிறது.

மிசிசாகா :- கிரகணம் பிற்பகல் 2:04 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:19 மணிக்கு, கிரகணம் மாலை 4:31 மணிக்கு முடிவடைகிறது.

நியூமார்க்கெட் :- கிரகணம் மதியம் 2:05 மணிக்கு தொடங்கி, 3:20 மணிக்கு உச்சம் பெற்று, 4:31 மணிக்கு முடியும்.

நயாகரா நீர்வீழ்ச்சி :- கிரகணம் பிற்பகல் 2:04 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:20 மணிக்கு, கிரகணம் மாலை 4:31 மணிக்கு முடிவடைகிறது. மொத்தம் மூன்று நிமிடங்கள் மற்றும் 31 வினாடிகள் நீடிக்கும்.

ஓக்வில் :- கிரகணம் பிற்பகல் 2:04 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:19 மணிக்கு, கிரகணம் மாலை 4:31 மணிக்கு முடிவடைகிறது. மொத்தம் 21 வினாடிகள் நீடிக்கும்.

ஓஷவா :- கிரகணம் பிற்பகல் 2:05 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:20 மணிக்கு, கிரகணம் மாலை 4:32 மணிக்கு முடிவடைகிறது.

ஒட்டாவா :- கிரகணம் பிற்பகல் 2:11 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:25 மணிக்கு, கிரகணம் மாலை 4:35 மணிக்கு முடிவடைகிறது.

பீட்டர்பரோ :- கிரகணம் பிற்பகல் 2:07 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:21 மணிக்கு, கிரகணம் மாலை 4:32 மணிக்கு முடிவடைகிறது.

பிக்கரிங் :- மதியம் 2:05 மணிக்கு கிரகணம் தொடங்கி, 3:20 மணிக்கு உச்சம், 4:31 மணிக்கு கிரகணம் முடியும்.

ரிச்மண்ட் ஹில் :- கிரகணம் பிற்பகல் 2:05 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:19 மணிக்கு, கிரகணம் மாலை 4:31 மணிக்கு முடிவடைகிறது.

செயின்ட் கேத்தரின்ஸ் :-கிரகணம் பிற்பகல் 2:04 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:19 மணிக்கு, கிரகணம் மாலை 4:31 மணிக்கு முடிவடைகிறது. மொத்தம் மூன்று நிமிடங்கள் மற்றும் 15 வினாடிகள் நீடிக்கும்.

தண்டர் பே :- கிரகணம் மதியம் 1:59 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:10 மணிக்கு, கிரகணம் மாலை 4:19 மணிக்கு முடிவடைகிறது.

டொராண்டோ :- கிரகணம் பிற்பகல் 2:04 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:19 மணிக்கு, கிரகணம் மாலை 4:31 மணிக்கு முடிவடைகிறது.

வோகன் :- கிரகணம் மதியம் 2:04 மணிக்கு தொடங்கி, 3:19 மணிக்கு உச்சம், 4:31 மணிக்கு கிரகணம் முடிவடைகிறது.

வோட்டர்லூ :- மதியம் 2:03 மணிக்கு கிரகணம் தொடங்கி, 3:18 மணிக்கு உச்சம், 4:30 மணிக்கு கிரகணம் முடியும்.

விட்பி :- மதியம் 2:05 மணிக்கு கிரகணம் தொடங்கி, 3:20 மணிக்கு உச்சம், 4:32 மணிக்கு கிரகணம் முடிவடைகிறது.

விண்ட்சர் :- கிரகணம் மதியம் 1:58 மணிக்கு தொடங்குகிறது, உச்சம் 3:14 மணிக்கு, கிரகணம் 4:27 மணிக்கு முடிவடைகிறது.



# ஹெய்ட்டியில் இருந்து கனேடியர்களை அழைத்து வர மற்றொரு விமான சேவை

ஒன்ராரியோ,ஏப்ரல்98

ஹெய்ட்டியில் இருந்து வெளியேறுவதற்காக கனடியர்களிடமிருந்து புதிய கோரிக்கைகள் வந்துள்ளமையால், அடுத்த வாரத்தில் மீண்டுமொரு விமான சேவையை நடத்துவதற்கு கனடிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எக்ஸ் சமூக தளத்தில் இது தொடர்பில் பதிவிட்ட வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி, நூற்றுக்கணக்கான புதிய கோரிக்கைகள் வந்துள்ளமையால் அரசாங்கத்தின் விமானம் ஒன்று அடுத்த வாரத்தில் ஹெய்ட்டியில் இருந்து ஹெய்ட்டியில் இருந்து ஏற்றிவரவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் ஹெய்ட்டியில் இருந்து கனெடியர்களை அழைத்து வரும் விமான சேவைகள் நிறைவு பெறுவதாக வெளிவிகார அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.



# பிரம்டன் விபத்தில் காயமுற்றவர் ஹெலி மூலம் வைத்தியசாலைக்கு

## மற்றிருவர் அம்புலன்ஸில் அனுப்பிவைப்பு

ஒன்ராரியோ,ஏப்ரல்08

பிரம்டனில் ஏற்பட்ட வாகன விபத்தில் காயமடைந்த ஒருவர் அவசர சிகிச்சைக்காக ஹெலிக்கொப்டர் மூலம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேஃபீல்ட் சாலைக்கு தெற்கே உள்ள மிசிசாகா சாலை மற்றும் வான்லெஸ் டிரைவ் அருகே ஏப்ரல் 7ஆம் திகதி மாலை 5.20 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டதாக பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# துப்பாக்கி முனையில் கைபேசியை கொள்ளையடித்த இருவர் சிக்கினர்

ஒன்ராரியோ,ஏப்ரல்08

வெள்ளிக்கிழமை மாலை ஸ்காபரோவில் இணைய வழி விற்பனையாளரைத் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்தனர் என இருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மிட்லாண்ட் அவென்யூ மற்றும் டான்ஃபோர்ட் ரோடு பகுதியில் உள்ள ஃபேஸ்புக் மார்க்கெட்பிளேஸில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்ட கைபேசியை வாங்குவதாக கூறிய வந்த இருவர் பெண்ணிடம் இருந்து கைபேசியை பறித்துச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு பேர் சாம்பல்நிற 2017ஆம் ஆண்டு ஹொண்டா சிவிக் காரில் வந்தனர் எனவும், வாகனத்திலிருந்து ஒருவர் இறங்கி தொலைபேசியைப் பார்த்தார் எனவும், அதனைத் தொடர்ந்து கைபேசியை எடுத்துக் கொண்டு காரிற்கு சென்ற போது, குறித்த பெண் கைபேசியைப் பெறுவதற்கு முயற்சித்த வேலையில், அவரைத் துப்பாக்கியைக் காட்டி சந்தேகநபர்கள் மிரட்டியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் இருவரும் சிறிது நேரத்தில் அங்கிருந்து தப்பியோடி விட்டனர். இந்த சந்தேகநபர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் தெரிவிக்கப்படுகின்றது.



## மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் இருவர் மீது குற்றம் குற்றச்சாட்டு

ஒன்ராரியோ,ஏப்ரல்08

கடந்த மாதம் செயின்ட் கேத்தரின்ஸில் 32 வயதுடைய ஆணின் சடலம் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து அந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மார்ச் 9 அன்று வெல்லண்ட் அவென்யூ மற்றும் லேக் ஸ்ட்ரீட்டிற்கு அருகில் உள்ள ரேமண்ட் தெருவில் உள்ள வீட்டில் இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

தடயவியல் புலனாய்வாளர்கள் பின்னர் அந்த உடல் பெப்ரவரி 29ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த கிரான்க்ரைட் என்பவருடைய உடல் என்பதை உறுதிப்படுத்தினர்.

ஏப்ரல் 7 ஆம் தேதி, 34 வயதான மைக்கேல் (மைக்) பேட்டர்சன் மற்றும் சமந்தா எம்பெர்ட், 33, இருவர் மீதும் இறந்த உடலுக்கு அவமரியாதை செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## போதையில் வாகனம் ஓட்டியவர் மரத்துடன் மோதுண்டு படுகாயம்

ஒன்ராரியோ,ஏப்ரல்08

ஸ்காபரோவில் உள்ள குடியிருப்புப் பகுதியில் குடிபோதையில் வாகனம் ஓட்டிய போது மரத்தில் மோதி விபத்துக்குள்ளான நபர் ஒருவர் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1:45 மணியளவில் ஒரு வாகனம் மரத்தில் மோதியது பற்றிய முறைப்பாடு தமக்குக் கிடைத்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் வாகனத்தின் சாரதியை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தச் சாரதி உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

